1er novembre 2009

Élection Montréal

ville.montreal.qc.ca/election

# தேர்வாளர் கையேடு

**மொன்றியல் நகர தேர்தல் குழுத் தலைவர் உங்களுடைய உரிமைகளைப் பற்றி இதன் மூலம் தெரிவிக்கிறார்.**

### *நீங்கள் வாக்களிக்க இயலுமா?*

வாக்களிப்பதற்கு, உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் பதியபட்டு, வாக்கெடுப்பு நாளில் பின்வரும் தகுதிகள் உங்களுக்கு இருக்க வேண்டும்.
**1.** குறைந்த பட்சம் 18 வயதுடையவராக இருக்க வேண்டும். **2.** கனேடிய பிரஜையாக இருக்க வேண்டும்; அத்துடன், **3.** கடந்த ஆறு மாதங்களாக கியூபெக்கில் வசித்திருக்க வேண்டும்.

### *உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் பதியப்பட்டுள்ளதா?*

உங்கள் வீட்டில் நீங்கள் பெறும் அறிவிப்பில் நீங்கள் சரிபார்க்கலாம்.

### *வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரை எப்படிப் பதிவது?*

உங்கள் மீளாய்வு அலுவலகத்திற்குச் சென்று, வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கான விண்ணப்பதைச் சமர்பிக்க வேண்டும். உங்களுக்காக உங்கள் உறவினர் ஒருவர் அல்லது கணவர்-மனைவி, அல்லது உங்களுடன் வசிக்கும் ஒருவர் கூட உங்களுக்காக விண்ணப்பதைச் சமர்பிக்கலம். உங்கள் அடையாளப் பத்திரங்கள் இரண்டு விண்ணப்பதுடன் சமர்ப்பிக்கப்படவேண்டும். அல்லது விண்ணப்பம் நிராகரிக்கபட்டு விடும்.

### *முதலாவது ஆவணம்*

முதலாவதில் உங்கள் பெயரும் பிறந்த திகதியும் முதலில் குறிப்பிடப்படல்வேண்டும். ***உதாரண்ம்***: பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், மருத்துவ அட்டை, கனேடிய கடவுப் ப்த்திரம்.

### *இரண்டாவது ஆவணம்*

இரண்டாவதில் உங்கள் பெயரும் வதிவிடமும் குறுபிடப் பட்டிருக்க வேண்டும்.
***உதாரண்ம்:*** சாரதிப் ப்த்திரம், தொலைபேசி அல்லது மின் இணைப்பு பற்றுச் சீட்டு.

### *மீள்பரிசீலனை அலுவலகம் எங்குள்ளது?*

உங்கள் வீட்டீற்கு அனுப்பப்பட்ட பதிவு அறிகையுல் உங்கள் மீள் பரிசீல்னை அலுவலகத்தின் விலாசமும் நேரங்களும் உள்ளன்.

### *எப்பொழுது எங்கே வாக்களிப்பது?*

வாக்களிப்பு நாளுக்குச் சில நாட்கள் முன்னர் உங்களுக்கு நினைவு படுத்தும் முகமாக எங்கு, எப்போது, நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்ற விபரங்களுடன் அறிவிப்பு கிடைக்கப் பெறுவீர்கள். வாக்களிப்பு நாளில் குறிப்பிட்ட விலாசத்திற்கு காலை 10.00 மணியிலிருந்து இரவு 8.00 மணிவரை நீங்கள் சமுகமளிக்கலாம். முன்கூட்டியே வாக்களிப்பிலும் நீங்கள் வாக்களிக்கலாம். முன்கூட்டியே வாக்களிப்பு நிலையங்களின் அலுவலக நேரங்களும், விலாசங்களும் உங்கள் வீட்டிற்கு அனுப்பிவைக்கப்படும் வாக்காளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

### *எவ்வாறு வாக்களிப்பது?*

| | |
|---|---|
| **தேர்தல்** | அதிகாரி வாக்காளர் பட்டியலில் உங்கள் பதிவை சரி பார்ப்பார். |
| **உங்களை** | நீங்கள் அடையாள் ஆவணம் சமர்ப்பிப்பதன் முலம் இளங்காட்டவேண்டும் |
| **உங்களிடம்** | வாக்களிப்புச்சீட்டுக்கள் தரப்படும். |
| **உங்களுடை** | தேர்வை செய்வதற்கு இரகசிய வாக்களிப்புச்சாவடிக்கு செல்ல வேண்டும்.உதவி வாக்கெடுப்பு அதிகாரி உங்களுக்குத் தரும் எழுது கோலால் மட்டுமே அடையாளம் இட வேண்டும். |
| **உங்களுக்குத்** | தரபட்ட வாக்களிப்புப் பத்திரத்திரங்களில் உள்ள வட்டங்களில் ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் அடையாள்ம் இட வேண்டும். |
| **வாக்காளித்து** | முடிந்ததும் மீண்டும் மேசைக்கு வரவேண்டும். நீங்களாகவே வாக்குப் பெட்டியில் உங்கள் வாக்குப் பத்திரத்தை போட வேண்டும். |

**அவசியம்: வாக்களிப்பதற்கு, பின்வரும் ஆவணங்க்களில் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் உங்கள் அடையாளம் ஒப்புவிக்கப்பட வேண்டும்**

1. **உங்கள் மருத்துவ அட்டை.**
2. **உங்கள் சாரதிப் பத்திரம்**
3. **உங்கள் கனேடிய கடவுப் பத்திரம்**
4. **உங்கள் இந்திய பத்திரம் அந்தஸ்து**
5. **உங்கள் கனேடிய படையினருக்கான அடையாள் அட்டை.**

### *ஏதேனும் கேள்விகள்?*

. எங்களது இணையத்தளம் மூலம் பின்வரும் முகவரியில் தொடர்ப்பு கொள்ளுங்கள்:
**www.ville.montreal.qc.ca/election**
. எங்களுடன் தொலைபேசி மூலம் பின்வரும் இலக்கத்தில் தொடர்ப்பு கொள்ளுங்கள்:
**514-872-VOTE(8683)**
. மின் அஞ்சல் பின்வருமாறு: election@ville.montreal.qc.ca
. தெளிவாகக் கேட்க முடியாதவர்கள் பின்வரும் இலக்கத்தில் தொடர்ப்பு கொள்ளுங்கள்:
**514-872-0679**

தேர்வாளர் கையேடு : ஏளிமைபட்ட தமிழ் மொழி பெயர்ப்பு
சாரம் : Le Directeur général des élections du Québec